**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO. I**
**DINDIGUL.**

**C.C.No. 906/2022**

## Prosecution Witness : 1

| | | | |
|---|---|---|---|
| **Name** | **: வனராஜ்** | **Caste** | **:** |
| **Father's Name** | **: அடைக்கணன்** | **Calling** | **:** |
| **Village** | **:** | **Religion** | **:** |
| **Taluk** | **:** | **Age** | **:** |
| | | **Dated** | **:** |

**20.02.2024**
இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 (பிரிவு 4 ) – ன் படி சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

பட்டியல் சாட்சி– 1 திரு வனராஜ் ஆஜர். பிரமாணம் போதிக்கப்பட்டு அ.சா. 1 ஆக முதல் விசாரணை செய்யப்பட்டார்.

**2 வது எதிரி ஆஜர்**
**மற்ற எதிரிகள் ஆஜரில்லை. 317 Cr.P.C. Petition filed and allowed.**
1. நான் சிறுமலை தாலக்கடையில் குடியிருந்து வருகிறேன். கூலி வேலை செய்து வருகிறேன். இவ்வழக்கில் காயம்பட்ட பூமிராஜ் எனது மகன், ஹாசினி, எனது மகன் பூமிராஜின் மகள், வசந்தராஜ் எனது பேரன் முறை. இவ்வழக்கின் எதிரிகளை தெரியும். எதிரிகள் எனது பக்கத்து வீட்டைச் சேர்ந்தவர்கள். 2 வருடத்திற்கு முன்பு தேர்தல் சமயத்தில் எனது மூத்த மகன் ஆண்டிச்சாமிக்கு உடல் நிலை சரியில்லாததால் நத்தம், புதுப்பட்டியில் சாமி கும்பிட்டுவிட்டு, திருநீரை எனது மகன் ஆண்டிச்சாமியின் வீட்டு வாசலில் போடச் சொன்னார்கள். அதை மணிகண்டன் தவறாக புரிந்து கொண்டு அவர்கள் வீட்டிற்குதான் செய்வினை செய்கிறார்கள் என நினைத்து, எங்களை நோத்தா, நொம்மா என்று கூறி பயங்கரமான சண்டை வந்தது. நான் எனது வீட்டிற்கு

தொட்டிற்கு அருகில் நின்று கொண்டிருந்தபோது எனது பேரன் வசந்தராஜ் மற்றும் எனது பேத்தி ஹாசினியை மணிகண்டன் கல்லை விட்டு எறிந்துவிட்டார். பாண்டி, பாண்டி மருமகள் மாரியம்மாள், பூமா, மணிகண்டன் தம்பி சுப்பிரமணி, ராமலெட்சுமி, எனது மகன் பூமியை அடித்துவிட்டார்கள். எனது பேரன், பேத்திக்கு தலையில் ரத்தம் வந்து கொண்டிருந்ததை பார்த்து அவர்களை மருத்துவமனைக்கு அழைத்துச் செல்ல வண்டியை கூட்டி வருவதற்குள் எனது மகன் பூமிராஜை மணிகண்டன் இரும்பு பைப்பால் அடித்து கையை ஒடித்துவிட்டார். நான் சிறுமலை செக்போஸ்ட் வரை வந்து அதன் பின்னர் ஆம்புலன்ஸ் மூலமாக திண்டுக்கல் அரசு மருத்துவமனை வந்து காயம்பட்டவர்களை சிகிச்சைக்காக சேர்த்தேன். இது சம்பந்தமாக நடவடிக்கை எடுக்க நான் தாலுகா காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். புகார் **அ.த.சா.ஆ.1** ஆகும். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**</u>

எனக்கு எழுதப் படிக்கத் தெரியாது. உடனடியாக புகார் எதுவும் கொடுக்கவில்லை. நான் கொடுத்த புகாரில் அடித்தல், திருத்தல் நிறைய உள்ளது என்றால் சரிதான். புகாரை யார் எழுதினார்கள் என்று எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. படித்துச் சொன்னார். படித்துச் சொன்னார் என்ற விபரத்தை புகார் மனுவில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். புகாரை எழுதியவர், புகாரில் சாட்சி கையொப்பம் இட்டுள்ளரா என்றால் இல்லை. எனது மூத்த மகன் ஆண்டிச்சாமிக்கு உடல் நிலை சரியில்லாததால் நத்தம், புதுப்பட்டியில் சாமி கும்பிட்டுவிட்டு, திருநீரை எனது மகன் ஆண்டிச்சாமியின் வீட்டு வாசலில் போடச் சொன்னார்கள் என்ற விபரத்தை போலீஸ் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. எங்களுக்குள் என்ன பிரச்சனை என்ற விபரத்தை போலீஸ் விசாரணையிலோ, அல்லது நான் கொடுத்த புகார் மனுவிலோ குறிப்பிட்டு எதுவும் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. பட்டியல் சாட்சி 2 முதல் 6 வரையிலான சாட்சிகள் அனைவரும் எனது உறவினர்கள். மணிகண்டனுக்கு காயம் இருந்ததா என்றால் நான் கவனிக்கவில்லை. எனது பேரன் பிள்ளைகள் தொட்டிக்கு பின்னால் விளையாடிக்கொண்டிருந்தபோது மணிகண்டன் கல்லை விட்டு எறிந்தார், என்ற விபரத்தை எனது புகார் மனுவிலும், போலீஸ் விசாரணையிலும் குறிப்பிட்டு சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். நான் மருத்துவமனைக்கு செல்ல வண்டி கூப்பிட சென்றபோது, 1ம் எதிரி பூமிராஜை கையை உடைத்துவிட்டார் என்ற விபரத்தை போலீஸ் விசாரணையிலும். புகாரிலும் குறிப்பிட்டு சொல்லியுள்ளேனா என்றால்

சொல்லியுள்ளேன். சண்டை நடக்கும்போது நான் வண்டி கூப்பிட சென்றுவிட்டேன், அங்கு இல்லை. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்தில் சுமார் 70 வீடுகள் உள்ளன. ஆட்கள் நிறைய கூடிவிட்டார்கள். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் பகுதியானது இரவு நேரம், இருட்டானதாகும். பூமிராஜனுக்கும், மணிகண்டனுக்கும் குடிப்பழக்கம் உள்ளது என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் தினத்தன்று தேர்தல் நாள் என்பதால் இருவரும் ஒன்றாகத்தான் காலையில் வண்டியில் பழையூர் சென்றார்கள். இருவரும் ஒன்றாக சீட்டு விளையாடினார்கள். மணிகண்டன் ஜெயித்துவிட்டார் என்ற விபரம் தெரியாது. மணிகண்டன் முதலில் வீட்டிற்கு வந்துவிட்டார். அதன் பிறகுதான் பூமிராஜ் வீட்டிற்கு வந்தார். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் தாலக்கடை ரோடு, கரடு முரடான ரோடு என்றால் சரிதான். ஆஜர் எதிரி பாண்டி சம்பவ நாளன்று திருநெல்வேலியில் திருமணத்திற்கு சென்றிருந்தார் என்றால் அது பற்றி தெரியாது. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்திற்கு போலீசார் வரவே இல்லை. மருத்துவமனையில் மட்டும்தான் வைத்து விசாரித்தார்கள். நான் முதல் விசாரணையில் சொன்னது போல் ஆஜர் எதிரிகள் யாரும் என் மகனையோ, மற்ற நபர்களையோ அசிங்கமான வார்த்தைகளால் திட்டவோ, அடிக்கவோ இல்லை என்றால் சரியல்ல. ஆஜர் எதிரிகளால் எனது மகனுக்கோ, மற்றவர்களுக்கோ எவ்வித காயமும் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. வழக்கின் காயம்பட்டதாக சொல்லப்படும் நபர் எனது மகன் என்பதால் அவருக்கு ஆதரவாக போலீசார் கேட்டுக் கொண்டதன் பேரில் தவறான சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

taken down by me in open court read over to the Witness in the presence of the accused interpreted to him Tamil and admitted by him to be correct.

V PRIYA Digitally signed by V PRIYA Date: 2024.02.20 17:14:11 +0530

Judicial Magistrate No.I
Dindigul.

**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO. I**
**DINDIGUL.**

**C.C.No. 906/2022**

## Prosecution Witness : 2

| | | | |
|---|---|---|---|
| **Name** | : வெள்ளையம்மாள் | **Caste** | : |
| **Husband's Name** | : பூமிராஜா | **Calling** | : |
| **Village** | : | **Religion** | : |
| **Taluk** | : | **Age** | : |
| | | **Dated** | : |

**20.02.2024**
இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 (பிரிவு 4 ) – ன் படி சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

பட்டியல் சாட்சி– 2 திருமதி வெள்ளையம்மாள் ஆஜர். பிரமாணம் போதிக்கப்பட்டு அ.சா. 2 ஆக முதல் விசாரணை செய்யப்பட்டார்.

**2 வது எதிரி ஆஜர்**
**மற்ற எதிரிகள் ஆஜரில்லை. 317 Cr.P.C. Petition filed and allowed.**
1. நான் சிறுமலை, தாலக்கடையில் குடியிருந்து வருகிறேன். கூலி வேலை செய்து வருகிறேன். இவ்வழக்கில் காயம்பட்ட பூமிராஜ் எனது கணவர், ஹாசினி எனது மகள், வசந்தராஜ் எனது மகன் முறை. இவ்வழக்கின் எதிரிகளை தெரியும். எதிரிகள் எனது பக்கத்து வீட்டைச் சேர்ந்தவர்கள். 06.04.2021ம் தேதி இரவு 7.00 மணிக்கு எனது கணவர் பூமிராஜ் வெளியே சென்றுவிட்டு வீட்டிற்கு வந்தார். எனது கணவர் வீட்டிற்கு வரும்போதே மணிகண்டன், எனது கணவரிடம் வாடா உன்னை வெட்டாமல், குத்தாமல் விடமாட்டேன் என்று சொல்லிக்கொண்டே வந்தார். எனது கணவர் எனது வீட்டருகே வரும்போது மணிகண்டன் எனது கணவரை கீழே இழுத்துப்போட்டு கம்பியால் இடது கையில் அடித்து கை உடைந்துவிட்டது, தலையில் அடித்து தலையும் உடைந்துவிட்டது. பாண்டி, மாரியம்மாள், பூமா,

ராஜலெட்சுமி ஆகியோர் என்னையும், எனது மாமியார் சரஸ்வதியையும் அடித்தார்கள். எதிரிகள் அடித்ததில் எனது இடது கை விரலில் காயம்பட்டது. வலது கையிலும் காயம்பட்டது. மணிகண்டன், எனது மகள் ஹாசினியை கல்லால் தலையில் அடித்து காயம் ஏற்படுத்திவிட்டார். மணிகண்டன் எறிந்த கல் பட்டதில் எனது மச்சான் ஆண்டிச்சாமி மகன் வசந்தகுமாருக்கு கையில் காயம்பட்டது. எதிரிகள் என்னை மிகவும் அவதூறாக பேசினார்கள். பின்னர் காயம்பட்டவர்களை அழைத்துக் கொண்டு திண்டுக்கல் அரசு மருத்துவமனை சென்றோம். போலீசார் என்னை விசாரித்தார்கள். என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள சாட்சி கையெழுத்து என்னுடையதுதான். புகாரில் உள்ள சாட்சி கையெழுத்து **அ.த.சா.ஆ.2** ஆகும்.

<u>**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**</u>

நான் திண்டுக்கல் அரசு மருத்துவமனையில் இருந்தபோது எந்த போலீசார் வந்துவிசாரித்தார்கள் என்றால் தெரியாது. போலீசார் விசாரிக்கும்போதும், முதல் விசாரணையில் சொன்ன விபரங்களை மட்டும்தான் சொல்லியுள்ளேன். எனது குழந்தைகள் வீட்டிற்குள் இருந்தார்கள் என்ற விபரத்தை போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். எனது மாமனார் தாலுகா காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தார். அந்த புகார் மனுவில் நானும் கையெழுத்து செய்து கொடுத்தனுப்பினேன். நாங்கள் இருவர் மட்டும்தான் அந்த புகார் மனுவில் கையொப்பம் செய்துள்ளோம். எனது கணவர் பூமிராஜனுக்கு குடி பழக்கம் உள்ளது என்றால் சரி. சம்பவம் நடந்த நாள் தேர்தல் நாள் என்றால் சரிதான். பூமிராஜனும், மணிகண்டனும் காலையில் இருசக்கர வாகனத்தில் ஒன்றாகத்தான் சென்றார்கள் என்றால் அந்த விபரம் தெரியாது. எனது கணவர் பூமிராஜனும், மணிகண்டனும் சீட்டு விளையாடும் பழக்கம் உள்ளது என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் சமயத்தில் அக்கம் பக்கம் ஆட்கள் கூடிவிட்டார்கள் என்றால் அங்கு இருட்டு என்பதால் யாரும் வரவில்லை. பஸ் வசதி எதுவும் கிடையாது. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் ரோடு கரடு, முரடான ரோடு, வீட்டிற்கு அருகில் முள் வேலி அமைத்துள்ளார்கள். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் சமயத்தில் நான் எங்கு இருந்தேன், என்ன செய்து கொண்டிருந்தேன் என்று போலீசார் விசாரணையிலும், முதல் விசாரணையிலும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் நான் சொன்னேன். குழந்தைகள் ஹாசினி மற்றும் வசந்த்தை போலீசார் விசாரிக்கவில்லை. வழக்கு சொத்துக்களை போலீசார் வசம் நான் ஒப்படைத்தேனா அல்லது போலீசார் என்னிடம் இருந்து கேட்டுப் பெற்றுக் கொண்டார்களா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. நான் முதல் விசாரணையில் சொன்னது போல் எந்த ஒரு சம்பவமும்

நடைபெறவில்லை என்றும், எனது கணவர் பூமிராஜ்தான் குடிபோதையில் மணிகண்டனிடமும், அவரது குடும்பத்தினரிடமும் சீட்டு விளையாட்டு சம்பந்தமாக தகராறு செய்தார் என்றும், அங்கு நடந்த தள்ளுமுள்ளில்தான் காயம் ஏற்பட்டது என்றால் சரியல்ல. எதிரிகளால் எனது கணவருக்கோ, அல்லது மற்ற நபர்களுக்கோ காயம் எதுவும் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. பூமிராஜ் எனது கணவர் என்பதாலும், அ.சா.1 எனது மாமனார் என்பதாலும் போலீசார் கேட்டுக் கொண்டதன் பேரில் அவர்களுக்கு ஆதரவாக நீதிமன்றத்தில் தவறான சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

taken down by me in open court read over to the Witness in the presence of the accused interpreted to him Tamil and admitted by him to be correct.

V PRIYA Digitally signed by V PRIYA Date: 2024.02.20 17:14:20 +0530

Judicial Magistrate No.I
Dindigul.

**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO. I**
**DINDIGUL.**

**C.C.No. 906/2022**

## Prosecution Witness : 3

| | | | |
|---|---|---|---|
| **Name** | : பூமிராஜா | **Caste** | : |
| **Father's Name** | : வனராஜ் | **Calling** | : |
| **Village** | : | **Religion** | : |
| **Taluk** | : | **Age** | : |
| | | **Dated** | : |

**20.02.2024**
இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 (பிரிவு 4 ) – ன் படி சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

பட்டியல் சாட்சி– 3 திரு பூமிராஜ் ஆஜர். பிரமாணம் போதிக்கப்பட்டு அ.சா. 3 ஆக முதல் விசாரணை செய்யப்பட்டார்.

**2 வது எதிரி ஆஜர்**
**மற்ற எதிரிகள் ஆஜரில்லை. 317 Cr.P.C. Petition filed and allowed.**
1. நான் சிறுமலை, தாலக்கடையில் குடியிருந்து வருகிறேன். கூலி வேலை செய்து வருகிறேன். ஹாசினி எனது மகள், வசந்தராஜ் எனது அண்ணன் மகன். இவ்வழக்கின் எதிரிகளை தெரியும். எதிரிகள் எனது பக்கத்து வீட்டைச் சேர்ந்தவர்கள். சம்பவத்திற்கு ஒரு வாரத்திற்கு முன்பாக எனது அண்ணன் ஆண்டிச்சாமிக்கு உடல்நிலை சரியில்லாததால் சாமி கும்பிட்டுவிட்டு அவர் வீட்டு முன்பு திருநீர் வைத்ததால் எதிரிகள் விடாமல் எங்களுடன் சண்டை போட்டார்கள். 06.04.2021ம் தேதி இரவு 7.00 மணிக்கு நான் எனது வீட்டில் வீட்டாருடன் பேசிக் கொண்டிருந்தபோது, மணிகண்டன் எங்களுடன் வாக்குவாதம் செய்து, என்னை தேவிடியா மகனே என திட்டி இரும்பு பைப்பால் எனது கையிலும், தலையிலும் அடித்து காயம் ஏற்படுத்தினார். பின்னர் சுப்பிரமணி, பாண்டி, லெட்சுமி, மாரியம்மாள், கூழம்மாள் ஆகியோர் எனது வீட்டில்

கல்லை விட்டு எறிந்து எனது மகளுக்கு தலையில் ரத்தக் காயம் ஏற்பட்டது. எனது அண்ணன் மகனுக்கும் கையில் காயம் ஏற்பட்டது. பாண்டி அடித்ததில் எனது அம்மாவிற்கு கையில் காயம்பட்டது. அதன்பின்னர் நாங்கள் 108 ஆம்புலன்ஸ் மூலமாக திண்டுக்கல் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்ந்தோம். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

நான் திண்டுக்கல் அரசு மருத்துவமனையில் போலீசார் கடந்த 07.04.2021ம் தேதி காலை 10.00 மணியளவில் விசாரித்தார்கள். நான் மது அருந்தும் பழக்கம் உள்ளவன் என்றால் சரிதான். நானும், மணிகண்டனும் ஒரே இருசக்கர வாகனத்தில் ஓட்டு போடுவதற்காக பழையூர் சென்றிருந்தோம் என்றால் சரிதான். ஓட்டு போட்டுவிட்டு சீட்டு விளையாடிவிட்டு வந்தோம் என்றால் சரிதான். 7.00 மணிக்கு வீட்டிற்கு வந்தேன். முதல் விசாரணையில் சொன்ன விபரங்களை மட்டும்தான் போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேன். எனது வீட்டைச் சுற்றி அருகாமையில் நிறைய வீடுகள் உள்ளது என்றால் சரிதான். ஆட்கள் நிறைய கூடிவிட்டார்கள் என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் ரோடு கரடு, முரடான ரோடு, வீட்டிற்கு அருகில் முள் வேலி அமைத்துள்ளார்கள். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் சமயம் இரவு நேரம் இருட்டான பகுதி, பேருந்து வசதி கிடையாது என்றால் சரிதான். முள் வேலி அமைத்துள்ளார்கள். நான் முதல் விசாரணையில் சொன்னது போல் எந்த ஒரு சம்பவமும் நடைபெறவில்லை என்றும், நான்தான் குடிபோதையில் மணிகண்டனிடமும், அவரது குடும்பத்தினரிடமும் சீட்டு விளையாட்டு சம்பந்தமாக தகராறு செய்தேன் என்றும், அங்கு நடந்த தள்ளுமுள்ளில்தான் எனக்கு காயம் ஏற்பட்டது என்றால் சரியல்ல. எதிரிகளால் எனக்கோ, அல்லது மற்ற நபர்களுக்கோ காயம் எதுவும் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. அ.சா.1 எனது தகப்பனார் என்பதால் போலீசார் கேட்டுக் கொண்டதன் பேரில் அவருக்கு ஆதரவாக நீதிமன்றத்தில் தவறான சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சம்பவம் சம்பந்தமாக நான் எதுவும் புகார் கொடுக்கவில்லை என்றால் சரிதான். எனது அப்பா புகார் கொடுத்த விபரம் எனக்கு தெரியும். அந்த புகாரில் நான் சாட்சி கையெழுத்து எதுவும் போடவில்லை.

taken down by me in open court read over to the Witness in the presence of the accused interpreted to him Tamil and admitted by him to be correct.

V PRIYA

Digitally signed by V PRIYA
Date: 2024.02.20 17:14:27 +0530

Judicial Magistrate No.I
Dindigul.

**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO. I**
**DINDIGUL.**

**C.C.No. 906/2022**

## Prosecution Witness : 4

| | | | |
|---|---|---|---|
| **Name** | **: சரஸ்வதி** | **Caste** | **:** |
| **Husband's Name** | **: வனராஜ்** | **Calling** | **:** |
| **Village** | **:** | **Religion** | **:** |
| **Taluk** | **:** | **Age** | **:** |
| | | **Dated** | **:** |

**20.02.2024**
இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 (பிரிவு 4 ) – ன் படி சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

பட்டியல் சாட்சி– 4 திருமதி சரஸ்வதி ஆஜர். பிரமாணம் போதிக்கப்பட்டு அ.சா. 4 ஆக முதல் விசாரணை செய்யப்பட்டார்.

**2 வது எதிரி ஆஜர்**
**மற்ற எதிரிகள் ஆஜரில்லை. 317 Cr.P.C. Petition filed and allowed.**
1. நான் சிறுமலை, தாலக்கடையில் குடியிருந்து வருகிறேன். கூலி வேலை செய்து வருகிறேன். இவ்வழக்கில் காயம்பட்ட பூமிராஜா எனது மகன். ஹாசினி எனது பேத்தி, வசந்தராஜ் எனது பேரன் முறை. இவ்வழக்கின் எதிரிகளை தெரியும். எதிரிகள் எனது பக்கத்து வீட்டைச் சேர்ந்தவர்கள். சம்பவத்திற்கு ஒரு வாரத்திற்கு முன்பாக எனது மகன் ஆண்டிச்சாமிக்கு உடல்நிலை சரியில்லாததால் சாமி கும்பிட்டுவிட்டு அவர் வீட்டு முன்பு திருநீர் வைத்ததால் எதிரிகள் விடாமல் எங்களுடன் சண்டை போட்டார்கள். அதன்பின்பு சம்பவத்தன்று எனது மகன் பூமிராஜுக்கும், மணிகண்டனுக்கும் சண்டை வந்தது. அப்போது மாரியம்மாள், பூமா, பாண்டி, குட்டி, ஆகியோர்கள் எனது மகனை அடித்துவிட்டார்கள். தடுக்கச் சென்ற எனக்கும் கையில் காயம்பட்டது. மணிகண்டன் கல்லை விட்டு எறிந்ததில் எனது பேரன் வசந்தராஜ்க்கு கையில்

காயம் ஏற்பட்டது. மணிகண்டன் எறிந்த கல் பட்டதில் எனது பேத்தி ஹாசினிக்கும் தலையில் காயம் பட்டது. அதன்பின்னர் காயம்பட்டவர்களை திண்டுக்கல் அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றார்கள். அதன்பின்னர் மறுநாள் போலீசார் எனது வீட்டிற்கு வந்துவிசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

போலீசார் என்னை தாலக்கடையில் விசாரித்தார்கள். முதல் விசாரணையில் சொன்ன விபரங்களை மட்டும்தான் போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் போலீசார் என்னை விசாரிக்கவே இல்லை. முதல் விசாரணையில் சொன்னதுபோல் எந்த நிகழ்வும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. அ.சா.1 எனது கணவர் என்பதால் போலீசார் கேட்டுக் கொண்டதன் பேரில் அவருக்கு ஆதரவாக நீதிமன்றத்தில் தவறான சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

taken down by me in open court read over to the Witness in the presence of the accused interpreted to him Tamil and admitted by him to be correct.

V PRIYA Digitally signed by V PRIYA Date: 2024.02.20 17:14:35 +0530

Judicial Magistrate No.I
Dindigul.